1987 நவம்பர் 16]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ஆண்டுதோறும் 4, 5 பேர்களுக்கு மனநோய் பிடித்துவிடுகிறது என்று உறுப்பினர் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அது தவறு. எல்லா இடங்களிலும் அப்படி இருக்க முடியாது. அது புதிய கருத்தாக இருக்கிறது. அரசு ஒப்புக்கொண்ட கொள்கைப்படி எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவை ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

தென்காசி மாணவர் விடுதி.

123—(*வினா எண். 8956) **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறையுடன் இணைந்து இருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதியில் ஆதி திராவிட மாணவர்களுக்காக கட்டப்பட்ட மாடி அறைகள் 74 மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்திருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக தற்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதியின் மாடியில் 12 அறைகள் மட்டுமே உள்ளன. இவ்விடுதியின் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 60 ஆகும். எனவே, மாடியிலுள்ள 12 அறைகளும் காலியாக உள்ளன. விடுதியில் அதிக இடவசதி இருப்பதால், கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஆதி திராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும் பிரிக்கப்பட்ட நேரத்தில் இந்த விடுதியைப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தன்னிடம் வைத்துக்கொண்டது. இந்தத் துறையானது 10 ஆண்டுக் காலமாக அறைகளை மூடி வைத்திருக்கிறது. திறப்பு விழா அன்றைக்கு போட்ட கோலங்கள் கூட அப்படியே இருக்கின்றன. மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால்

கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு நாட்களில் அந்த நல்ல காரியம் நடக்கும் என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் ஒரு சிறிய திருத்தம். ஒருவேளை 'டைப்' செய்யும் போது தவறாக தட்டச்சு செய்திருக்கலாம் என்று கருதுகிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். இரண்டு சமையல் அறைகளையும் சேர்த்து 14 அறைகள் என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். இப்போது கேள்வியில் 74 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை 14 என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் மாணவர்கள் சேர்கிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அதற்கு நல்ல காலம் வந்துசேரும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் ஏற்படுத்துகின்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதற்காக அவர்கள் இடம் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டலுக்காக இந்த 12 அறைகளில் சில அறைகள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அது நிச்சயமாக இப்பொழுது சாத்தியமில்லை.

வட சென்னை மீன்பிடித் துறைமுகம்.

124—(*வினா எண். 12494) திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ளதா? மாநில அரசின் நிர்வாகத்தில் உள்ளதா?

(ஆ) இந்த மீன்பிடி துறைமுகம் சிறிய படகுகளுக்காகவா அல்லது மீன்பிடி கப்பல்களுக்காகவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே(அ) வட சென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தின் நிர்வாகத்தை மீன்பிடித் துறைமுக நிர்வாகக்குழு மூலமாக சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் நிர்வகிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) சென்னை மீன்பிடித் துறைமுகம் 500 மீன்பிடி விசைப் படகுகளுக்கும், 50 மீன்பிடி நாவாய்களுக்கும் தங்குதள வசதி அமைக்கும் பொருட்டு கட்டப்பட்டுள்ளது.